TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் X.] **NOVEMBER, 1910-௵ நவம்பர்௴.** [இலக்கம் 4.

பறவைகளைக் கூடுகளி லடைத்தல்.

எப்போதும் சுறுசுறுப்பாய்ப் பறந்தோடி விளையாடுகிற பக்ஷிகளை இப்புறம் அப்புறம் திரும்பவுங்கூட விடமில்லாத கூண்டுகளி லடைத்துவைப்பது மிகவும் குரூரமான காரியம். பறவைகளுக் கதனா லுண்டாகிற கஷ்டத்தை, "கூட்டி லடைபட்ட பக்ஷி போல்," "பொன்கூடாயினும் சிறைச்சாலையே," என்று சாதாரணமாய் வழங்கப்படுகிற பழமொழிகளே நன்றாய் விளக்குகின்றன. இதை யறிந்திருந்தும் நமக்கு வெகு நாளாய்ப் பழக்கமாகிவிட்ட விஷயங்களில் நாம் சுயமாய் யோசித்து நடக்கிற அப்பியாசமில்லாததினால் உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் பறவைகளைக் கூடுகளில் பிடித்து வைத்து வளர்க்கிற வழக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. வெளியில் சந்தோஷமாய்ச் சஞ்சரிக்கின்ற பறவைகளைக் கூண்டி லடைத்தபோது அவை அவைகளின் சிறிய தலைகளைக் கம்பிகளின் வழியே வெளியில் தொங்கவிட்டு "நமக்கு விடுதலை கிடைக்காதா" என்று எண்ணுவதுபோல் நாற்புறமும் திரும்பிப் பார்ப்பதைக் கண்ணுறும் ஜனங்களுக்கு மனமிரங்கவில்லையே. பக்ஷிகளை விற்கிற விடங்களில் நடக்கிற கொடுமைக் களவில்லை. அங்கே ஒரு கூண்டில் அநேகம் பறவைகளை யடைத்து வைக்கிறார்கள். அந்த அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதனால் அநேகம் பறவைகள் மாண்டு போகின்றன. சில பறவைகள் கூண்டினின்றும் தப்பித்துக்கொண்டு போகலாம் என்று நினைத்துக்கொண்டு இறகுகளைக் கம்பிகளில் மோதியடித்துக்கொண்டு அந்த நோய்பொறுக்காமல் மூர்ச்சையாய் விழுந்து இறக்கின்றன. மற்றுஞ் சில, அவைகள் வழக்கமாய்ச் சாப்பிடுகிற ஆகாரம் கொடுக்கப்படாமல் விதைகளையே சதா சாப்பிட முடியாமல் பட்டினி கிடந்து சாகின்றன.

"போதாக் குறைக்குப் பொன்னியம்மன் குறை" என்பதுபோல், இவை போதாமல் எலிகளின் உபத்திரவத்தினா லநேகம் சிறு பறவைகள் மாள்கின்றனவாம். பறவைகளின் கூடுகள் பெரியவையாயிருந்தால் அவை அதனுட் சிறிதுநேரம் பறக்கவும் குதித்துக் குதித்து நடக்கவும் இடமிருக்கும். கூண்டுகளைச் சிறியவையா யமைப்பதினால் பறவைகளின் அவயவங்களுக்கு வேலையின்றி அவை நோயுறும். பறவை விற்போர் சிலர் தங்கள்மேல் யாதொரு குற்றமில்லையென்றும் அவர்கள் பறவைகளுக்கு வேண்டியவளவு தீனி கொடுப்பதாகவும் சொல்லுகிறார்கள். பறவைகள் உயிரோடிருப்பதற்குத் தீனி கொடுப்பது மாத்திரம் போதுமென்று நினைப்பவன் பக்ஷிகளை வளர்க்க யோக்கியதையற்றவனாவான். சிறைபட்ட பறவைகளுக் குண்டாகிற பலவித நோய்கள் உணவின் குறைவாலன்றி அவைகளி னியற்கையாயுள்ள வாழ்வுக்கு இடையூறாயிருக்கிற பல வேறு காரணங்களினால் தோன்றுகின்றனவென நன்றாய்த் தெரிகிறது. பறவைகள் அவைகளின் அவயவங்களை உபயோகித்து அவைகளுக்குச் சுபாவமாயுள்ள விருப்பங்களைத் திருப்திப்படுத்திக்கொள்வதனாலல்லவா சந்தோஷத்தையும் ஆரோக்கி

யத்தையும் அடையும். அஃதின்றி, இரண்டு நேர்த்தியான இறகுகளும் அவைகளை யுப யோகிக்கும்பொருட்டு, மானிட தேகத்தில் மிகப் பெரியதாயிருக்கிற தசைநரம்பைக் காட்டிலும் பலமடங்கு பெரியதானதும் பற வையின் எடையில் ஆறில் ஒருபங்கு பார முள்ளதுமான தசை நரம்பும், ஈஸ்வரனு லளிக்கப்பெற்று அவைகளை யசைவற்று வைக்கும்படிச் சம்பவித்தால் அப்பறவைக ளுக்குத் தேகசௌக்கிய மெப்படியுண்டா கும். பலவிதமான உணவைத் தின்பது அவைகளின் சுபாவமாயிருக்க, எப்போதும் ஒரேவிதமான தீனி கொடுத்தால் அவை எப் படிச் சுகமாயிருக்கும். தேகத்தின் உறுப் புகள் சலனமற்றுக்கிடப்பதனுல் நோயுறுவ துபோலவே அவைகளின் மனோசக்தியும் சிறைபட்டிருக்கிற நிலைமையினுல் குறைந்து போகும்.

பறவைகளை வளர்க்கிறவர்களில் சிலர், அவை கூண்டுகளி லிருக்கும்போது நன் ருய்ப் பாடுகின்றன வென்றும் ஆதலால் அவைகளை யடைத்துவைப்பது அவைகளுக் குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும் சொல்வதுண்டு. அவ்வாறு பாடுவது சந்தோ ஷத்தி னறிகுறி யென்று நினைப்பது பிசகு. சிறையில் வைக்கப்பட்ட மனிதர்கூட தங் களுடைய சிறைச்சாலைகளின் வருத்தங்க ளைக் கொஞ்ச நேரமாகிலும் மறந்திருக்கலா மென்று பாட்டுகளைச் சொல்லிக்கொண்டு காலங் கழிப்பதுண்டு. சில பிச்சைக்காரர் கள் மழையில் குளிரினுல் நடுங்கிக்கொண்டு போர்த்துக்கொள்ள ஒரு வஸ்திரங்கூட வில் லாமல் அவஸ்தைப்படும்பொழுது பாடிக் கொண்டிருக்கிருர்களே. அப்பொழுது அவர்க ளதிக சுகத்தை யனுபவிக்கிருர்களென்று சொல்லுகிறது. தம்மிஷ்டத்தினுலோ அல் லது பலாத்காரத்தினுலோ தேகத்தின் மற்ற உறுப்புகள் அவ்வவற்றின் தொழில்களைப் புரிவதினின்றும் தடைபட்டிருக்கையில் கட் டுப்படாமலிருக்கிற அவயவத்தை அதிக மாக வேலைசெய்ய விடுவதனுல் பிராணிக ளுக்கு ஒருவித ஆறுதல் உண்டாகும். ஆகவே, சிறைபட்ட பறவைகள் பாடுவது அவைகளுக் குண்டாயிருக்கிற சந்தோஷத் தினுலென் றெண்ணக்கூடாது.

இன்னுமொரு திறத்தார், பக்ஷிகள் எதேச் சையாய்த் திரிவதில் அநேகவிதமான ஆபத் துகளுக் குள்ளாகின்றனவென்றும், அவ்வா றின்றிக் கூண்டுகளில் பத்திரமாய் வளர்க்கப் படுவது அவைகளுக்கு நன்மைதானென்றும் சொல்லி, தாங்கள் செய்கிற காரியத்தைக் கண்ணியப்படுத்திக் கொள்ளுகிருர்கள். இப் படிச் சொல்லுகிறவர்கள், மனிதர் தங்களுக் கினி வரப்போகிற துக்கங்களைப்பற்றி நினை ந்து கவலையுறுவதுபோலவே, பறவைகளுக்கு மவ்விதமான எண்ணங்கள் தோன்றத்தக்க மனோவல்லமை யிருப்பதாக அபிப்பிராயப் படுகின்றனர்போலும். மிருகங்களுக்கும் பற வைகளுக்கும் அவ்வவற்றிற்குரிய சுபாவ வுணர்ச்சி தவிர மனிதனைப்போல் முக்கால விசாரணையுஞ் செய்யத்தக்க புத்தி கிடை யாது. இவ்வபிப்பிராயத்தை ராபர்ட் பரன்ஸ் (Robert Burns) என்னுங் ஸ்காட்லாந்து தேசத்திலிருந்த கவிராயர் தான் உழுது கொண்டிருந்த கலப்பையின் நுனியால் குத் தப்பட்டிறந்த எலியைப் பார்த்து, பின் எழு தப்பட்ட தாற்பரியங்கொண்ட செய்யுள்க ளைப் பாடியுள்ளார்.

"எலியே! நீ இறந்துபோனபோதிலும் என்னைவிட அதிக அதிர்ஷ்டசாலி. நீ உனக்குத் துன்பம் வரும்போதுதான் அதை யுணரும் சுபாவ முடைத்தாயிருந்தாய். நா னே முற்காலத்தில் எனக்குண்டான வீண் மனோராச்சியங்களைப்பற்றி நினைக்க நினைக்க மனக்கிலேசமடைவதும், இனி வரப்போகிற தாகத் தோன்றுகிற துன்பங்களைப்பற்றி இப் பொழுதே அச்சப்படுவதுமா யிருக்கிறேன்."

கூண்டுகளில் வளர்க்கப்படுகிற பறவைக ளுக்கு நம்மிஷ்டப்படி திரிவதினின்று தடுக் கப்பட் டிருக்கிறுேமென்ற வுணர்ச்சிமட்டு மிருக்குமேயொழிய, அங்கே யாதொரு அபாயமும் பகையாளிகளு மில்லாமல் பத் திரமாயும் சுகமாயு மிருப்பதாக வெண்ணி அவைகள் சந்தோஷப்படமாட்டா. இம் மாதிரி யெண்ணத்தக்க புத்திவாய்ந்த மனி தக் கைதிகூட தன்னுடைய சிறைச்சாலையை விட்டு, எவ்வளவு அபாயங்களுக் கிடமாயி ருந்தபோதிலும் வெளியில் சஞ்சரித்து வாழ் வதற்கே விரும்புவான்.

வேருெரு கூட்டத்தார், பறவைகளைக் கூண்டுகளில் வைத்துப் பட்டணங்களுக் கனுப்புவதனுல், நாட்டுப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள நேர்த்தியான பக்ஷிகளின் இசையைக் கேட் டாநந்திக்க அவகாசமில்

லாத நகரவாசிகளுக்கு அவர்களி னிருப்பிடத்திலேயே அவ்வித வின்பங்கள் கிடைக்கச்செய்வது நல்லதுதானே யென்று சொல்லுகிறார்கள். இதுநீதிக்கு விரோதமானது. மனிதராயினும் சரி, பிராணிகளாயினும் சரி, பிறரைத் தங்களுடைய இசையினால் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்று தாமே சுயேச்சையாய் வந்து பாடினால் அது மிகவும் உத்தமமாகும். அப்படியில்லாமல் ஒருவன் தன்னுடைய சுய நலத்தின்பொருட்டு ஒரு தீங்கற்ற பிராணியைப் பலவந்தமாய்ப் பிடித்து வைத்துப் பாடச்செய்வது மனிதனுடைய குரூரத்தன்மையை விளக்குமேயொழிய அது ஒருபோதும் சரியான காரியமாகாது.

அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் சுதேசப் பறவைகளைக் கூண்டுகளி லடைத்து விற்கக்கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவ்விதமாகவே இங்கிலாந்திலும் இந்தியாவிலும்சட்டங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று ஆங்கிலேய இராஜாங்கத்தாரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆபத்திற் குதவிய சிநேகிதன்.

நவம்பர் மாசத்தில் புயலடிக்கும் ஒரு நாள் சாயந்தரம் நார்பக் என்னும் நகரத்தில் கிழக்குக் கரையோரத்தில் ஒரு சிறு குடிசையில், தேயிலை நீர் அப்பொழுதுதான் குடித்துக்கொண்டிருந்த கிரயின்கர் என்கிற துரைசானியும் ஆமி என்கிற சிறுமியும் ஒரு சிறு அறைக்குள் புகுந்தார்கள். அங்கே வீட்டு எஜமானர் சுருட்டு பிடித்துக்கொண்டும் சமாசாரப் பத்திரிகை வாசித்துக்கொண்டும் நெருப்பண்டையில் குளிர் காய்கிறார். நெருப்பினருகில் உட்கார்ந்து, “காற்று என்ன சப்தம் செய்கிறது!” என்று எட்டு வயதுள்ள சிறு ஆமி சொன்னாள். “நீ சொல்வது உண்மை. காற்று அதிக சப்தம் செய்கிறது” என்று அவளுடைய தகப்பனார் சொன்னார். நாற்காலியிலிருந்து எழுந்து வந்து பலகணியை மூடிவிட்டார். ஆகாயம் அடர்ந்த மேகங்களால் மூடியிருந்தது. பக்கத்தில் சில மரங்கள்தவிர வேறெந்த வஸ்துவும் கண்ணுக்குப் புலப்படவில்லை. புரளுகிற நாகத்தைப்போல மரங்கள் மும்முரமா யடிக்கும் காற்றினால் தத்தளித்தன. காற்றின் வேகம் சற்று அடங்கினதும், ஆமியும் அவள் தகப்பனும் ஜன்னலின் பக்கத்தில் நின்றார்கள். அப்பொழுது நாய் விசனகரமாய் ஊளையிடுகிற சப்தம் கேட்டது. “தகப்பனாரே! பரிதாபப்படத்தக்க புரூஸ் ஏன் அழுகிறது? இன்றிரவு சமையலறையில் தூங்குமென்று நினைத்தேன். ஆனால் இன்றிரவு அது குளிரால் விறைத்துக்கொண் டிருக்கும்” என்று சிறுமி சொன்னாள். அதற்கு “அதை வீட்டிற்குக் கொண்டுவா வேண்டுமென்று நினைத்தேன். அது சார்பான இடத்திலிருப்பது உண்மை. ஆனால் இன்றையதினம் ஓர் அசாதாரணமான இரவாயிருக்கிறது. அதற்குச் சந்தோஷமிராது. என் சிறுமியே! ராந்தல் கொண்டுவா” என்று தகப்பனார் சொன்னார். ஆமி உற்சாகத்தோடு அதை எடுத்துக்கொண்டு வந்தாள். புருஷனிடம் கிரயின்கர் என்பவள் சந்தோஷமாய்ப் பேசினாள். ஜியார்ஜ் கிரயின்கர் சீக்கிரத்தில் வந்துவிட்டார். கம்பீரமான தலையும் கறுநிறமும் பெரிதுமான புரூஸ் என்னும் நாய் அறைக்குள் குதித்துக்கொண்டு வந்தது. அதன் வாலால் நாற்காலியின்பேரிலிருந்த பெட்டியிலுள்ள சாமான்கள் சிதறும்படியாகப் பலத்தோடு ஆட்டிற்று. தன் குழந்தையைப் பார்த்து ஒரு சிறு வேலையிருக்கிறதென்று தாயார் கூவினாள். விகாரமான ஜந்துவே! படுத்துக்கொள்ளென்று கிரயின்கர் என்பவள் சொன்னதும் அவள் கையை நக்கிற்று. தீமை நேரிடாதபடி பார்த்துக்கொண்டு சமயல் அடுப்பண்டை படுத்துக்கொண்டது. இராத்திரி எல்லாப் பக்கத்திலும் காற்று அடித்தது. இராத்திரி குடியானவர்களுக்குத் தூக்கம் கிடையாது. பொழுது விடிந்ததும் குடியானவர் வெளியே போகப் புறப்பட்டார். காலை போஜனம் சாப்பிட வந்தபொழுது “ஒரு விபத்து நேரிட்டது. நேற்றிரவு கடல் கொந்தளித்தது. கடற்கரையோரம் சின்னாபின்னமாய்விட்டது. நம்முடைய ஜனங்கள் கப்பலோட்டிகளா யில்லாததற்காகக் கடவுளுக்கு வந்தனம் செலுத்துகிறேன்” என்று கிரயின்கர் சொன்னார். “என் பர்த்தாவே! மறுபடியும் எங்கே போகிறீர்?” என்று மனையாள் கேட்டாள். “சதுப்பு நிலத்திற்குப் போகிறேன். அங்கே எழு குதிரைக் குட்டிகள் மேய்கின்றன. அவைகள் எப்படி இக்காற்றைச் சகித்துக்கொண்

டிருந்தன வென்பதைப் பார்க்கவேணும். அவ்விடத்தில் நிழல் கிடையாது. இரவெல்லாம் அவைகள் காற்றைப்பொறுத்துக்கொண்டிருந்தன" என்று அவர் சொல்ல, "தந்தையே! நான் உன்னேடு வரட்டுமா" என்று ஆமி கேட்டாள். தன் தகப்பனுரோடு நிலத்தில் உலாவுவதற்கு அவளுக்குப் பிரியம். "ஆமி! நீ போகக்கூடாது; வீட்டிலிரு" என்று தாயார் தடுத்தாள். "உன் தாயார் சொல்வது சரி; நீ இப்பொழுது வெளியில் வருவது உசிதமல்ல. உன்னேடு சாயந்தரம் விளையாடுவேன். சிறு புரூஸ்! நீ என்னுடன் வா" என்று கிரயின்கர் சொன்னுர். நாய் உடனே ஓடிற்று. சாதாரணமாய் நாயானது எஜமானனிடத்தில் நன்றியறிவு வுள்ளதாகயிருக்கிறதால் அதை அதிக விஸ்வாசத்தோடு அவன் காப்பாற்றுகிருன். ஜியார்ஜ் கிரயின்கர் என்பவரோ உயிருள்ள எல்லா ஜந்துக்களினிடத்தில் அன்பு பாராட்டுகிறவர். தனக்குத் தெரிந்து தன் சிறு இருப்பிடத்தில் ஒரு குதிரையையும் அதிக வேலை வாங்கி வருத்துவதில்லை. ஒரு ஜந்துவுக்கும் தீங்கு செய்வதுமில்லை. "கடவுள் நம்மிடத்தில் மிருகங்களை ஒப்புவிக்கிருர். மனப்பூர்த்தியாய்ப் போஷிக்கும்படி அவைகளைக் கடவுள் நம்மிடத்தில் விட்டுவிடுகிருர். ஆனல் அதற்கு நாம் செய்யும் செய்கை யாவற்றையும் அவர் கவனிக்கிருர். பரலோகத்தில் என்னை விசாரிக்கும் பொழுது, 'இவன் ஜீவ ஹிம்சை செய்தவன்' என்கிற கெட்ட பெயர் எனக்கு வேண்டாம். வாயில்லாத ஜந்துக்களுக்குத் தீங்கு செய்யாததினுல் நான் கஷ்டமில்லாம லிறப்பேன்" என்று அவர் சொல்வார். அவர் மிருகங்களிடத்தில் விசுவாசமுடையவர். இதன் பயனுகவே, புலத்தில் திரிந்துகொண்டிருந்த அவருடைய மிருகங்கள் சௌக்கியமாயிருந்தன. கடைசியாகச் சதுப்பு நிலத்தில் போய்ச் சேர்ந்தார். அவருடைய குதிரைக் குட்டிகள் அங்கே மேய்ந்துகொண்டிருந்தன. வடகிழக்கிலிருந்து காற்று வேகமாய் அடித்தது. கடற்கரையில் அலை மோதிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். "குதிரைகளை வீட்டிற்கு ஓட்டிவிடவேண்டும். கரை உடைந்தால் அந்த நிலம் முழுகிவிடும்" என்று நினைத்தார். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அலையினுல் கரை உடைந்துவிட்டது. நிலத்தில் தண்ணீர் உடனே பரவிற்று. அபாயத்தினுல் மெய் மறந்துவிட்டார். குதிரைக் குட்டிகளைப் பற்றிக் கவலையடைந்தார். "புரூஸ்! அவைகளைத் துரத்திக்கொண்டுவா" என்று எஜமானர் தனக்குச் சொன்ன சங்கதி தெரிந்துகொண்டு புரூஸ் ஓடிற்று. அவைகளின் பின்னுல் போய்த் துரத்தி வெளியே கொண்டு வந்து சேர்த்தது. புரூஸ்! குதிரைகளை வீட்டிற்குக் கொண்டுபோவென்று நன்றியறிவுள்ள நாய்க்கு உத்தரவு பண்ணினுர். சொன்னதும் அது கீழ்ப்படிந்து ஓடிற்று. அலை அதிக மும்முரமா யடிக்கவே அவரை இழுத்துக்கொண்டு போய்விட்டது. அவர் தலைக்கு மேல் தண்ணீர் வந்தது. அவருக்குக் கொஞ்சம் நீந்தத் தெரியும். உயிருக்கு அபாயம் வந்ததென்று நினைத்தார். பகுத்தறிய முடியாதபடி முழுதும் தண்ணீர் பரவிற்று. கடைசியாக அதைரியமடைந்தார். "இச்சமயத்தில் யாராகிலும் உதவாமற்போனுல் மனைவி பிள்ளைகளைப் பார்ப்பதற்கு இடமில்லை. கடவுள் அவர்களை இரட்சிப்பாராக" என்று சொல்லிப் பிரார்த்தித்தார். மறுதக்ஷணம் புரூஸ் நீந்திக்கொண்டு வருவதைக் கண்ணுற்றுர். சதுப்புநிலம் முழுகிவிட்ட சங்கதியை அவருடைய உறவினர்களில் இருவர் கேள்விப்பட்டார்கள். புரூஸ் எஜமானரை ஜாக்கிரதையாய்க் கரையில் கொண்டு வந்து சேர்த்தது. இதற்குள் சிலர் அவ்விடத்தில் வந்தார்கள். "யாராவது எனக்கு நேர்ந்த சங்கதியை என் மனைவிக்குப் பயமுண்டாகாதபடி சொல்லுவீராக. உடுப்பும் வேண்டியது என்று தெரிவியுங்கள்" என்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினுர். நடந்த சங்கதி அப்படியே தெரிந்தபொழுது ஆமியும் அவள் தாயும் நாயைத் தட்டிக் கொடுத்தார்கள். "அது அங்கே மறுபடியும் வந்து பார்க்காமல் போயிருந்தால் நானிறந்திருப்பேன். குதிரைகளோடு அனுப்பின பொழுது அதன் இஷ்டத்திற்கு விரோதமாகவே அனுப்பிவைத்தேன். கடவுள் அதன் மனசிலிருந்து திரும்பிவரச் செய்தார்" என்று எஜமானர் சொன்னுர். "நீர் நேற்றிரவு அதனிடத்தில விஸ்வாசமாயிருந்தீர். அது இன்று உம்மிடத்தில் விஸ்வாசம் காட்டிற்று" என்று அவர் மனையாள் சந்தோஷித்தாள். பிறகு அதன் சுருட்டை மயிர்க

ளின் ஈரத்தைத் துடைத்தாள். "என் குழந்தாய் 'நாம் ஒருவருக்கு நன்மை செய்தால் தான் நமக்கு அவர் நன்மை செய்வார்' என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய். புரூஸ் என்னிடம் நிஜமான சிநேகத்துவத்தைக் காட்டிற்று. என் சமுசாரத்தி னுள்ளவரைப் போல அதை நான் சாகிறபரியந்தம் காப்பாற்றுவேன்" என்று ஜியார்ஜ் கிரயின்கர் சொல்லிச் சிரித்தார்.

இந்தியாவில் மனிதனும் மிருகமும்.

இந்தத் தலைப்பெயர் வைத்து மிஸ்டர் ஜே. லாக்வுட் கிப்ளிங் என்னுந் துரை சில வருஷங்களுக்குமுன் எழுதின புஸ்தகத்தில் சொல்லப்பட்ட விஷயங்களி லிருந்து சில வற்றை யெடுத்துரைப்போம்:—

"அநேகமாய் ஹிந்து சித்திர வேலைக்காரர் தங்களுடைய புராணங்களி லெழுதப்பட்டிருக்கிற கதைகளைப் படங்களாக எழுதிக் காட்டுவதிலேயே அவர்களுடைய கல்வித் திறத்தை யுபயோகிக்கிறார்கள். அவ்வித படங்கள் ஏராளமாய்க் கடைகளில் விற்கப் படுவதையும் தேவாலயங்களின் மதிற்சுவர்களிலும், கதவுகளிலும், மண்டபங்களின் தூண்களிலும் அப்படிப்பட்ட பொம்மைகள் செதுக்கியிருப்பதையும் பார்க்கலாம். இன்னும் இந்தியாவுக்கு சேலைகள் ஏற்றுமதி செய்தனுப்புகிற ஐரோப்பிய வர்த்தகர்கள் அப்படிப்பட்ட படங்களைப் பலவித வர்ணங் கொடுத்து அச்சிட்டு அச்சேலைகளில் ஒட்டியனுப்புவதையுங் காணலாம்.

"ஹிந்துமதப் புராணங்களிற் கூறப்பட்டுள்ள தேவர்களில் இன்னின்ன தேவர்கள் இன்னின்ன விசேஷ லக்ஷணங்கள் வாய்ந்திருந்தன ரென்று குறிப்பிடும்பொருட்டு அந்தத் தேவர்கள் அந்தக் குணங்கள் பொருந்தியுள்ள பிராணிகளின் உறுப்புகளோடு அவதரித்ததாகவாவது அப்பிராணிகளைத் தங்களுக்கு வாகனங்களாகக் கொண்டதாகவாவது சொல்வது வழக்கம்.

"ஹிந்துக்களுக்குப் பிரதான தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர்களாகிய திரிமூர்த்திகளில் பிரஹ்மதேவன் அன்னப்பறவையையும், விஷ்ணு கருடனையும், மகேஸ்வரர் நந்தியையும் வாகனங்களாய் வைத்துக்கொண்டனர். ஸ்ரீ மகாவிஷ்ணு பத்து அவதாரங்களெடுத்தார். அதில் முதலவதாரத்தில், தான் ஒரு மச்சமாக வந்து சாகரத்தில் மூழ்கியிருந்த உலகத்தை மீண்டும் வெளிப்படுத்திக் காத்தார். மொகலாய சக்கரவர்த்திகளிற் சிரேஷ்டனான அக்பர் சக்கரவர்த்திக்காக எழுதப்பட்ட ஒரு படத்தில் சகல ஜீவராசிகளுடன் முழுகிக்கொண்டிருக்கிற உலகத்தை யொரு பெரிய படகைப்போலவும் அதை யொரு பெரிய மீன் பற்றி யிழுப்பதுபோலவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படம் இப்பொழுது ஜெயப்பூர் விநோதக் காட்சிச் சாலையிலிருக்கிறது. இரண்டாவதாகிய கூர்மாவதாரத்தில், மந்தரகிரியை மத்தாகவும், வாசுகி யென்னும் சர்ப்பத்தைக் கயிறாகவுங்கொண்டு ஒரு பக்கத்தில் தேவர்களும் மற்றொரு பக்கத்தில் அசுரர்களுமாக விருந்து பாற்கடலைக் கடைந்தபோது அந்த மலை அமிழ்ந்துவிடாமலதைத் தாங்கிக்கொண்டிருந்தாராம்.

"இதேமாதிரியாக, புத்தர்களுடைய புராணங்களிலும் ஜைனர்களுடைய புராணங்களிலும்கூட மிருகங்களைப்பற்றிய சரித்திரங்கள் அநேகம் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று பெரிய மதங்களும், அநேக தேவர்க ளிருக்கிறார்களென்ற பாவனையும் மறுபிறப்புண்டெனும் நம்பிக்கையு முடையன. இந்தியாவில் பலவிடங்களில் காணப்படுகிற சிதிலமடைந்த மடங்களிலும் கல்லறைகளிலும் புத்தருடைய விருத்தாந்தங்களை விளக்கிக் காட்டப்பல சித்திரங்களெழுதப்பட்டிருக்கின்றன. அஜண்டாவென்னும் மலையின் குகைகளிலும் இவ்வாறே அநேகம் பதுமைகளும், அவற்றில் விசேஷமாய்ப் புத்தரின் பல அவதாரங்களைக் குறிப்பிடும் பொருட்டோ என்னவோ பல மிருகங்களின் உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. வடமதுரையிலும் ஆப்பு என்னும் மலையின் பேரிலும் 2600 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டனவாகச் சொல்லப்படுகிற ஜைனரின் கோவில்களில் மிருகங்களின் உருவங்களமைத்த சித்திர வேலைகள் விசேஷமாய்க் காணப்படுகின்றன. இதென்ன ஆச்சரியம்! சில நூற்றாண்டுகளுக்குமுன் கிறிஸ்தவ சித்திரவேலைக்காரர்கள் நான்கு அப்போஸ்தலர்களின் படமெழுதும்போது அதில் அவர்களுடன் ஒரு மனிதன், ஒரு சிங்கம், ஒரு

கழுகு இவைகளையுஞ் சேர்த்து எழுதவில்லையா? இப்படித் தங்களுடைய அபிப்பிராயங்களைக் குறிப்பால் வெளிப்படுத்துகிற வித்தையைக் கிறிஸ்தவர்களு மப்பியசித்து வந்ததாகத் தெரிகிறது.

“இதையெல்லாம் கவனித்துப் பார்க்கையில், மனிதர் மற்றப் பிராணிகளிடத்தில் தயவும் அன்புமுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்பதைப் போதிப்பிக்கவேண்டுமென்பது ஹிந்து சாஸ்திரங்களின் முக்கியமான நோக்கமாயிருக்கலாமென்று தோன்றுகிறது. அப்படியிருந்தும் ஹிந்துக்களி லநேகர் அறியாமையினால் கீழ் ஜந்துக்களுக்கு ஹிம்சைபுரிகிறார்கள். கோஹத்தி தோஷம் ஒரு மனிதனைக் கொல்லுவதனா லுண்டாகிற பாபத்தைக் காட்டிலுங் கொடியதென்று ஹிந்து சாஸ்திரங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

“ஆயினும் குடியானவர் தங்கள் உழவுமாடுகளின் வாலைப் பற்றி முறித்து அவைகளை யோட்டுகிறார்கள். வண்ணான் தன் கழுதையின்மேல் அது தாங்கமுடியாத பெரிய மூட்டைகளைச் சுமத்திச் செல்கிறான். அநேகர் காயப்பட்ட குதிரைகளையும் எருதுகளையும் வண்டிகளில் பூட்டுகிறார்கள். சிலர் எருதுகளையும் கோழிகளையும் வளர்த்து சண்டைக்கு விடுகிறார்கள். இவையெல்லாம் அவிவேகத்தினாற் செய்யப்படுங் காரியங்கள்.

“ஆகையால் இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜீவ ஹிம்சை நிவாரண ராஜ சங்கம்போன்ற சங்கங்கள் உலக முழுவதும் உண்டாகி ஜனங்களுக்கு அறிவைப் புகட்டினா லிப்படிப்பட்ட குரூரமான காரியங்கள் நின்றுவிடும்.”

ஓர் ஊர்க்குருவியும், அதன் பேட்டையும்.

ஓர் ஊரில் ஓர் ஆண் குருவியும் பெண் குருவியும் வாழ்ந்து வந்தன. ஒருநாள் பெண் குருவி ஆண் குருவியினிடத்தில் தனக்குப் பாயசம் சாப்பிடவேண்டுமென்று ஆசையுண்டாயிருப்பதாகச் சொல்லிற்று. அதற்காண் குருவி, அங்கோரிடத்தில் ஒரு குடிசைக்கு எதிரில் ஒரு பெண் பாயசங் காய்ச்சிக்கொண்டிருந்ததைக் காட்டி “அங்கே போய் அந்தப் பாயசத்தைக் குடித்துவிட்டு வா” வென்று சொல்லிற்று. அது அப்படியே அவ்விடத்திற்குச் சென்று அந்த ஸ்திரீ அப்புறம் போகிற சமயம் பார்த்து பாயசச் சட்டியின்மே லுட்காரப் போனபோது எப்படியோ கால் தவறி அந்தச் சட்டிக்குள் விழுந்து மாண்டது. சிறிதுநேரங் கழித்துப் பாயசத்தை யிறக்கிவைக்க வந்த ஸ்திரீ அதில் குருவி விழுந்திருந்ததைப் பார்த்து அந்தப் பாயசத்தையெல்லாம் குப்பையில் கொட்டிவிட்டாள். பாயசங் குடிக்கச் சென்ற பெண் குருவி வெகு நேரம்வரையில் திரும்பி வாராமற்போகவே அந்த ஆண் குருவி யதைத் தேடிக்கொண்டு வந்து நடந்ததை யறிந்து அதிக விசனமடைந்து தன் சிறகுகள் உதிர்ந்துவிடும்படி யழுது, பிறகு அங்கிருந்து சென்று ஒரு ஆலமரத்தில்போ யுட்கார்ந்து தன் கஷ்டத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தது. அந்த ஆலமரம் குருவியைப் பார்த்து “குருவியே! நேற்று உனக்கு மிகவும் அழகான இறகுகளிருந்ததைக் கவனித்தேன். அவை இன்று காணப்படவில்லையே. உனக்கென்ன ஆபத்து நேரிட்டது” என்று கேட்டது. அதற்காண்குருவி யதைப்பார்த்து “ஓ பக்ஷமுள்ள ஆலமரமே! என் துக்கத்தை யென்னென்று சொல்வேன். என் மனைவி பாயசங் குடிக்க ஆசைகொண்டு அங்கோரிடத்திலொரு ஸ்திரீ காய்ச்சிக்கொண்டிருந்த பாயசத்தைக் குடிக்கும் பொருட்டுப்போ யந்தக் கொதிக்கிற பாயசத்தில் விழுந்து செத்தாள். அதனால் எனக்கு ஆறாத்துயரமுண்டாகி நான் அழவே என் சிறகுக ளிப்படி யுதிர்ந்துவிட்டன” வென்று சொல்லிற்று. இந்த விசனகரமான செய்தியைக் கேட்ட ஆலமரம் குருவியைப் பார்த்து “உனக்கு நேரிட்ட துன்பத்தைக் கேட்க எனக்கு அதிக விசனமாயிருக்கிறது. நானும் என் விசனத்தைக் காட்டும்பொருட்டு என் இலைகளை யெல்லா முதிர்த்துவிடுகிறேன்” னென்று சொல்லித் தன் இலைகளையெல்லாம் உதிர்த்தது.

வழக்கமா யந்த மரத்தின் நிழலில் படுப்பதற்காக வருகிற பசுவொன்று அன்று பகலிலும் வந்து பார்க்க மரத்தின் இலைகளெல்லாம் தரையில் உதிர்ந்து கிடந்ததைப் பார்த்து, “ஓ ஆலமரமே! உனக்கென்ன தீங்கு விளைந்தது. நேற்று உன் கிளைகள் முழுவதும் இலைகள் அடர்ந்து நீ வெகு அழகாயிருந்தனையே, இன்று அவையெல்லாம் வெறுங்

கொம்புகளாயிருக்கின்றனவே" என்று வினவிற்று. ஆலமரம் பசுவைப் பார்த்து "ஓ பசுவே! என் நண்பனுன ஆண் குருவியின் மனைவி கொதிக்கிற பாயசத்தில் விழுந்து மாண்டாள். அந்தத் துக்கம் பொருமல் ஆண் குருவி தன் சிறகுகளை உதிர்த்துவிட்டது. நானும் என் விசனத்தைக் காட்டும்பொருட்டு இந்தக் கதியடைந்தே" னென்று பதில் கூறிற்று. இதைச் செவியுற்ற பசுவும் அதிக விசனமடைந்து சிறிதுநேரம் சிந்தித்து நின்று அங்கிருந்த ஒரு பாறையில் தன் கொம்புகளி லொன்றைத் தாக்கி யதை யொடித்துக்கொண்டது.

அப்பா லந்தப் பசு தண்ணீர் குடிப்பதற்காக ஒரு நதிக்குப் போனபோது அந்த ஆறு பசுவின் கொம்புகளி லொன்று காணுமற்போகவே அது பசுவைப் பார்த்து அதன் கொம்புகளி லொன்று முறிபட்டதற்குக் காரணமென்ன வென்று வினவ, பசுவும் பின்வருமாறு விடை கொடுத்தது. "நதியே! பெண் குருவி கொதிக்கிற பாயசத்தில் விழுந்திறந்ததைப் பொறுக்காமல் ஆண் குருவி தன் சிறகுக ளுதிரும்படி யழுதது. அதைக் கண்ட ஆலமரமும் தன் இலைகளை யெல்லா முதிர்த்துவிட்டது. நானுமந்த துக்ககரமான செய்தியைக் கேட்டு மனம் சகியாமல் என் கொம்புகளி லொன்றை முறித்துக்கொண்டேன்" என்றது. இச்செய்தியைக் கேட்டு ஆறும் விசனமுற்றுப் பெண் குருவியின் சாவுக்காகத் தானும் துக்கங்கொண்டாடும்பொருட்டு தன் ஜலத்திற் பெரும்பான்மையை வற்றச்செய்து, தான் ஒரு சிறு வாய்க்காலாகப் பாயத் தலைப்பட்டது. மறுநாள் காலையில் அவ்வாற்றுக்கு வந்த ஓர் மயில் எப்பொழுது மோடிக்கொண்டிருந்த பெரிய ஆற்றைக் காணுமல் ஒரு சிறிய வாய்க்காலிருந்ததைக் கண்ணுற்று, அந்நதியைப் பார்த்து "ஓ நதியே! நீ எக்காலத்திலும் வற்றுமல் ஜலம் பெருகிக்கொண் டிருப்பாயே. இப்பொழுதேன் சிறு வாய்க்காலாகக் குறுகிவிட்டாய்" என்று கேட்டது. அதற்கந்த ஆறு, "மயிலே! என் சிநேகிதனுன ஆண் குருவி தன் மனையாள் கொதிக்கிற பாயசத்தில் விழுந்திறந்த துயரத்தைச் சகியாமல் அதன் இறகுகளையெல்லாம் உதிர்த்துவிட்டது. அதைக்கேட்ட ஆலமரமும் அதன் இலைகளை யுதிர்த்தது. அது கண்ட பசு தன் கொம்புகளி லொன்றை யொடித்துக்கொண்டது. அதற்காக நானுமிப்படிக் குறுகிவிட்டேன்" என்று சொல்லிற்று. இச்சங்கதியைக் கேட்டு மயிலும் தன் விசனத்தைக் காட்டும்பொருட்டு அதனழகான தோகையை யுதிர்த்துவிட்டது. பிறகு அது தன் வீட்டுக்குப் போனபோது அத னெஜமானன் அது தோகையற்று வருகிற கோரத்தைப் பார்த்துச் சகிக்காமல் அதிக கோபங்கொண்டு அதை யடித்துத் துரத்திவிட்டான். அந்தப் பரிதாபமான பக்ஷி தன்னுடைய வெட்கத்தைப் பொறுக்காமல் இனிமேல் மனிதருடைய கண்ணுக்குத் தோன்றக் கூடாதென்று நிச்சயித்து ஒரு காட்டுக்குச் சென் றங்கோர் மரத்தின் அடியில் பதுங்கிக்கொண்டது. அங்கே யொரு மந்திரவாதி வந்து மயிலைப் பார்த்து "மயிலே! உன்னுடைய அழகான தோகை யெங்கே போய்விட்டது? நீ ஏனிப்படி யொளித்துக்கொண்டிருக்கிறு" யென்று கேட்டான். அந்த மயில் மேலே கூறப்பட்ட விருத்தாந்தங்களை யெல்லாம் அம்மாந்திரிகனுக்குச் சொல்லித் தன் எஜமானன் தன்னை யடித்துத் துரத்தியதையும் சொல்லிப் புலம்பிற்று. இதை யெல்லாங் கேட்ட மந்திரவாதி கொஞ்சநேரம் யோசித்து நின்று, "இது தகாது, பெண் குருவிக்காக நீங்கள் யாரும் துக்கப்பட வேண்டியதில்லை. அதை நான் உயிர்ப்பிக்கிறேன்" என்று சொல்லி தன் மந்திரக்கோலை உயரத் தூக்கினுன். உடனே அந்த மரத்தின்மேல் பெண் குருவி வந்து உட்கார்ந்திருப்பதையும் அதனருகில் ஆண் குருவி அதன் சிறகுகள் முளைக்கப்பெற்று வட்ட மிடுவதையுங் கண்ணுற்ற மயிலுக்கு அடங்காத சந்தோஷம் உண்டாகவே, அதன் தோகையும் முன்போல அழகாக நீண்டுவிட்டது. பிறகு அம்மூன்றுஞ் சேர்ந்து நதியண்டை போயின. அவைகளைப் பார்த்தவுடன் அவ்வாறு மதிக சந்தோஷப்பட்டு முன்போலப் பிரவாகமாக ஓட ஆரம்பித்தது. இப்படியே பசுவுக்குக் கொம்பு வளர்ந்து ஆலமரத்தின் இலைகளும் நன்றுய்த் துளிர்த்தன.

முக்கியமா யிக்கதையினுல் நாமறிந்துகொள்ளவேண்டிய தென்னவென்றுல் வாயில்லாப் பிராணிகளுக்கே அவைகளி லொன்றுக்கு நேர்ந்த துன்பத்தைக் கேட்டு

மற்றவைகளுக்கு மனம் பொறுக்கவில்லை யென்றால், அவைகளைவிட எத்தனையோ மடங்கு விசேஷமான புத்தியுள்ள மானிடர் எல்லா ஜீவன்களிடத்திலும் இரக்கமுடையவர்களா யிருக்கவேண்டு மென்பதே.

சமாசாரக் குறிப்புகள்.

1. **கால்நடைகளின் சேதம்.** — இவ்வருஷத்து முதல் மூன்று மாதங்களில் சென்னை இராஜதானியில் சகலவித நோய்களாலு மிறந்த கால்நடைகளின் தொகுதி 18,544. அதற்கு முந்திய மூன்று மாதங்களி லிறந்தவை 23,364. இந்தக் குறைவுக்கு முக்கியமான காரணம் கோமாரி நோய் முந்திய வருஷங்களில் வந்ததுபோல் மும்முரமா யிப்பொழுது வாராததே. இவ்வருஷம் கோமாரி நோய் கண்ட விடங்களிலெல்லாம் வெடரினெரி அஸிஸ்டண்டுகளை நியமித்துக் கால்நடைகளுக்கு அம்மை குத்தத் தகுதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவ்வாறு அம்மை குத்தப்பட்ட 6,595 கால்நடைகளில் தஞ்சாவூரில் மாத்திரம் குத்தப்பட்டவை 1,515. சில ஜில்லாக்களில் குடிகள் தங்கள் கால்நடைகளுக்கு அம்மை குத்திவைக்கச் சம்மதிக்கவில்லை. கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர் ஜில்லாக்களில்தான் சேத மதிகம். காட்டுமிருகங்களா லடியுண்டு செத்தவை 2,329. இவ்விதமான சேதம் தென்கன்னடத்தில்தான் அதிகமாக உண்டாகிறது.

2. **குதிரைகளைக் கோல்லுதல்.** — கடந்த செப்டெம்பர்மீ 21உ பெங்களூர் ஜில்லா மாஜிஸ்திரேட்டின் முன்னிலையில் ஷேக் மதாரென்னு மொரு வண்டிக்காரன் மற்றொரு வண்டிக்காரனுடைய மூன்று குதிரைகளைப் பாஷாணங் கொடுத்துக் கொன்ற குற்றத்திற்காக விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். பொறாமையினால் தான் செய்கிற காரியத்தின் கொடுமையையு மறியாமல் மனிதர்கள் வாயில்லாத மிருகங்களைக் கொன்றார்கள். இப்படிப்பட்ட குற்ற மேற்பட்டவர்களுக்குக் கடினமான தண்டனை விதிக்கவேண்டும்.

3. **குதிரைகளின் காட்சி.** — சிகந்தராபாத்தில் சென்ற செப்டெம்பர் மாசத்தில் மாட்சிமைதங்கிய நைஜாம் அவர்களின் பரிபாலனத்தின்கீழ் குதிரை விநோதக் காட்சியொன்று நடந்தது. அக்காட்சிக்கு அரபிக் குதிரைகள், பெகு மட்டங்கள், ஆஸ்திரேலியா தேசத்துப் பெரிய குதிரைகள் முதலிய பலவித ஜாதிக் குதிரைகள் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு வகுப்பிலும் உயர்ந்த மிருகங்களைக் கொண்டுவந்தவர்களுக்கு வெகுமதிகள் விசேஷமா யளிக்கப்பட்டன.

4. **காளை மாட்டுச் சண்டை.** — சில நாட்களுக்குமுன் போர்த்துகல் தேசத்தோர் பட்டணத்தில் காளை மாடுகளைச் சண்டைக்கு விட்டபோது அம்மாடுகளில் ஒன்று திகில் கொண்டு ஓட ஆரம்பித்து, சுற்றிலும் கிராதிக்குப் பின்புறமிருந்த அநேக ஜனங்கள் அதைப் பார்த்துத் திப்பிரமைகொண்டு நின்றுவிட்டபடியால் அவ்விடமிருந்த காவற்காரர்கள் அம்மாட்டைச் சுட்டுப்போடச் சாத்தியப்படவில்லை. ஆகையால் அம்மாடு கிராதியைத் தாண்டி மைதானத்திற்குத் தப்பித்துக் கொண்டு ஓடும்போது, சுமார் 40 ஜனங்களுக்குப் பெருத்த காயங்கள் உண்டாயினவாம். இப்படிப்பட்ட அபாயகரமான ஆட்டங்களை மிக்க நாகரிக மடைந்திருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளும் தேசத்தாராகிலும் எப்பொழுது நிறுத்திப்போடுவார்களோ அறியோம்?

5. **நிலக்கரி கனிகளில் ஜீவ ஹிம்சை.** — இங்கிலாந்தில் இருக்கும் ஜீ. ஹி. நி. ராஜ சங்கத்தைச் சேர்ந்த டியூக் ஆப் போர்ட்லாண்டு என்னுந் துரையவர்கள் சில நாளைக்குமுன் நாட்டிங்காம் என்னும் ஊரிற் செய்த உபந்நியாசத்தில், நிலக்கரி கனிகளில் குதிரைகளை மிகவும் ஹிம்சிக்கிறார்களென்றும், அவ்வாறு ஹிம்சிப்பவர்கள் அக்குதிரைகளைப்போலத் தாங்கள் ஹிம்சிக்கப்பட்டால் அந்தக் கஷ்டத்தை யறிவார்களென்றுஞ் சொன்னார். இன்னும், ஆந்தைகளைக் கொல்லக்கூடாதென்றும் அவைகள் அதிகப் பிரயோசனமுள்ள பறவைகளென்றும் அவருடைய நிலங்களி லெங்கும் ஆந்தைகளைக் கொல்லக்கூடாதென்று கட்டளை யிட்டிருப்பதாகவுஞ் சொன்னார்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.